இழந்து மொத்தமுல இந்த விபத்து ஏற்பட் வித்தனர்.

கேள்வி அறிவித்தல்
பருத்தித்துறை நகரசபை

1. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.
2. தேசிய போட்டிக் கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2016.09.30ஆந் திகதிய 04/2016(i) இலக்க பொதுநிதிச் சுற்றறிக்கையின்படி வடமாகாண எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட பெறுகைதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
3. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் அட்டவணையில் காட்டியபடி கட்டட/வீதிப்புனரமைப்புக்கு பொருத்தமான தரங்களில் நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு செய்யப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள் பெறுகை ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் (தொலைபேசி இலக்கம்:- **021-226-3213**) மேலதிக தகவல்களையும், பெறுகை ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
6. பெறுகைப் பத்திரங்கள் 07.07.2023 ந் திகதி தொடக்கம் 21.07.2023 ந் திகதி வரை அலுவலக நாட்களில் பார்வையிடலாம். அத்துடன் மீளளிக்கப்படாத பணமாக ரூபா 3000/= இனை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. பெறுகை ஆவணங்களை இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை எனும் முகவரிக்கு **24.07.2023** ஆந் திகதி மு.ப **10.00** மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ சேர்ப்பிக்க வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். பெறுகை நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் பெறுகைதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் பெறுகை திறக்கப்படும்.
8. பெறுகையானது சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து அறுபத்து மூன்று (63) நாட்கள் 24.09.2023 வரையும் செல்லுபடியாகும்.
9. பெறுகை தொடர்பான முதற் கூட்டம் பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் 12.07.2023 ந் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும். சொந்த செலவில் பங்குபற்றலாம்.
10. பெறுகை தொடர்பில் மாற்றங்களை ஏற்படுத்தும் அதிகாரம் பெறுகைக்குழுவின் தலைவருக்கே உண்டு.
11. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

இல	வேலைத்திட்டம்	மதிப்பீட்டு தொகை மில்லியன் ரூபாவில் (வற் நீங்கலாக)	ஒப்பந்த காலம்	நிதி மூலம்	பிணை வைப்பு ரூபா	கேள்விப் பிணை	
						பிணை வைப்பு ரூபா	செல்லு படியாகும் காலம்
1	நெல்லண்டை கிழக்கு வீதி 4ம், 1ம் ஒழுங்கை நிர்மாணம் (மீள்கேள்வி)	1.86	60 நாட்கள்	சபை நிதி 2022,2023	C9/C8	19,000.00	23.10.2023
2	கல்லூரி வீதி வாய்க்கால் நிர்மாணம் (மீள்கேள்வி)	0.49	60 நாட்கள்	சபை நிதி 2022,2023	C9/C8	5,000.00	23.10.2023
3	பருத்தித்துறை மீன் சந்தை வளாகத்தில் குளிரூட்டி அறை (Cool Room) அமைத்தல்	7.02	60 நாட்கள்	பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP) - 2023	C8/C7	70,500.00	23.10.2023

2023.07.06

தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு,
பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை.